**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்**

**நாள். 09.09.2025**

**O.S. 94 / 2020**

**வா.சா.3 - நாகராஜன்**

**முதல் விசாரணை.**

நான் இந்த வழக்கில் வாதி தரப்பில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என் தரப்பு சாட்சியத்திற்கு நான் எழுத்து மூல பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். வழக்கறிஞருக்கு நான் சொல்லி தயார் செய்யப்பட்டு என்னால் படித்துப் பார்க்கப்பட்டு பின்பு கையொப்பம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் இருக்கும் கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். மேற்படி கையொப்பம் எங்கு வைத்து போடப்பட்டது என்றால் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து போடப்பட்டது. வழக்கறிஞர் அலுவலகம் எங்கு உள்ளது என்றால் தற்போது சாட்சி தானாக முன்வந்து பூதப்பாண்டி நீதிமன்றத்தில் வைத்து கையொப்பம் இட்டதாக கூறினார். என்றைய தினம் கையொப்பம் போடப்பட்டது என்றால் சரியாக ஞாபகம் இல்லை. சுமார் எத்தனை நாட்கள் இருக்கும் என்றால் சுமார் இரண்டு மூன்று வாரங்கள் இருக்கும். பூதப்பாண்டி நீதிமன்றத்திற்கு நான் வழக்கறிஞர் வரச்சொல்லியதால் அதன் பேரில் சென்றேன். பூதப்பாண்டி நீதிமன்றத்தில் எனக்கு வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் இல்லை. பூதப்பாண்டி நீதிமன்றத்திற்கு என்னை வரும்படி அழைத்த வழக்கறிஞர் பெயர் என்ன என்றால் பிறைசூடும் பெருமாள் பிள்ளை. மேற்படி பிறைசூடும் பெருமாள் பிள்ளை வழக்கறிஞர் என்பவர் இவ்வழக்கின் வாதி என்றால் சரிதான்.

இவ்வழக்கின் வாதி மற்றும் பிரதிவாதிகள் எத்தனைபேர் என்ற விபரம் தெரியுமா

என்றால் பிறைசூடும் பெருமாள் பிள்ளையின் மனைவி இவ்வழக்கின் வாதி, பிறைசூடும் பெருமாள் பிள்ளை வழக்கை நடத்துபவர். இவ்வழக்கின் பிரதிவாதிகள் யார் என்றால் திவாவடுதுறை மடம் வேறு பிரதிவாதிகள் தெரியாது. எத்தனை பிரதிவாதிகள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் என்ன குறிப்பிட்டுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் பிறைசூடும் பெருமாள் பிள்ளையும் அவரது மனைவியும் 30 வருடமாக பயிர்செய்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் நான் விபரம் கூறினேன் எங்கு வைத்து தயாரிக்கப்பட்டது என்று தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் ஏற்கனவே தயார் செய்யப்பட்டது அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

நான் சொன்னதன் பெயரில் தயார் செய்யப்பட்ட பிரமாண வாக்குமூலம் இல்லை என்றால் சரியல்ல. பிறைசூடும் பெருமாள் பிள்ளை என்னிடம் 30 வருடமாக பயிர்செய்து வரும் விபரம் உனக்கு தெரியும் அதை நீதிமன்றத்தில் சொல்லமுடியுமா என்று கேட்டார்கள் அதன் அடிப்படையில் நான் சம்மதித்தேன். புறவில் யார்யாருக்கு வயல் உள்ளது யார்யார் பயிரிடுகிறார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 30 வருடம் பயிர்செய்து வருவதாக எவ்வாறு தெரியும் என்றால் அதற்கு அருகில் தான் எனது வயல் நான் பாட்டத்திற்கு பயிரிட்டு வருகிறேன். சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது தேவையில்லை. யாருடைய வயல் என்றால் எனது மருமகளின் வயல் சர்வே எண் தெரியாது.

மேற்படி சொத்து மருமகளுக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் அவரது தாத்தா அவருக்கு எழுதிக்கொடுத்தது. மருமகளின் பெயர் என்ன என்றால் செல்வி. தாத்தாவின் பெயர் என்ன என்றால் செல்லபெருமாள் பிள்ளை. என்றைய தினம்

எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் 2004, 2005 இருக்கும் மருமகளின் திருமணத்தின்போது எழுதிக்கொடுத்தது. அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் முடியாது. எந்த சொத்திற்கு பக்கத்தில் செல்வியின் வயல் என்றால் மாதவன்பிள்ளை சொத்திற்கு பக்கத்தில் உள்ளது. வழக்குபட்டிகை சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் எத்தனை சொத்துக்கள் உள்ளது என்றால் இரண்டு செத்துக்கள் இருப்பதாக கூறினார்கள் ஒரு சொத்து பற்றி தெரியும். மேற்படி இரண்டு சொத்துக்களில் எந்த சொத்தின் அருகில் செல்வியின் சொத்து உள்ளது என்றால் தெரியாது.

இந்த சொத்தின் பாட்டதாரர் என்று யாரை குறிப்பிட்டுள்ளீர் என்றால் சுஜா. பாட்டதாரர் என்பதற்கான ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் ஆம். என்ன ஆவணம் என்றால் பாட்டம் செலுத்திய ரசீதை பார்த்துள்ளேன். மேற்படி ரசீது எந்த வருடத்திற்கானது என்றால் தெரியாது. மேற்படி ரசீதில் சுஜா பாட்டதாரராக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிறைசூடும் பெருமாள் பிள்ளை என்ற வழக்கறிஞர் எனது அண்ணன் என்றால் சரிதான். எனக்கு சொத்தை பற்றியோ விவசாயத்தை பற்றியோ எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. பிறைசூடும் பெருமாள் பிள்ளை எனது சகோதரன் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**